# தேசிய கல்வி நிறுவகம்

## உடற்கல்வியும் விளையாட்டும்
## உயர் டிப்ளோமாக் கற்கைநெறி
## 2024/2025

தேசிய கல்வி நிறுவகத்தின் சுகாதாரமும் உடற்கல்விக்குமான பிரிவு வழங்கும் கற்கைநெறிக்கு இரண்டாவது உடற்கல்வியும் விளையாட்டும் உயர் டிப்ளோமாக் குழுவினருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**கற்கைநெறிக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்**

- கல்வி அமைச்சினால் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக இருப்பதோடு க.பொ.த (உ.த) சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

- கல்வி அமைச்சினால் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக இருப்பதோடு 05 வருடம் சேவை அனுபவத்துடன் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட 06 மாதப் பயிற்சியைப் பெற்றிருத்தல்.

அல்லது

- தனியார் பாடசாலை ஒன்றில் அல்லது நிறுவனம் ஒன்றில் சேவை அனுபவத்துடன் க.பொ.த. (உ.த) சித்தியடைந்திருத்தல் மற்றும் சர்வதேச, தேசிய மாகாண மட்டப் போட்டியில் வெற்றி பெற்றிருத்தல்.

**கற்கைநெறித் தகவல்**

| | |
|---|---|
| காலம் | - 02 வருடங்கள் |
| மொழி | - சிங்களம் / தமிழ் |
| தேர்வு முறை | - நேர்காணல் |
| நடாத்தப்படும் முறை | - வார இறுதி நாட்கள் (மு.ப 8.30 மணி முதல் பி.ப 4.00 மணி வரை ) |
| கற்பித்தல் முறை | - விரிவுரைகள், செயன்முறை |
| பாடநெறிக்கட்டணம் | - ரூபா 90,000.00 (சமமான இரண்டு தவணைகளில் செலுத்தலாம்) |

மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | - ரூபா 2000.00 |
| பதிவுக் கட்டணம் | - ரூபா 1000.00 |

- பாடநெறியைப் பூர்த்தி செய்ததன் பின்னர் இலங்கைத் தகைமைச் சட்டகம் (SLQF IV) கல்வி மட்டத்தை நிறைவு செய்தமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

- தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைத் திணைக்களத்தின் https://www.exams.nie.lk/intakes/new இணையத்தளத்திற்குச் சென்று அங்கு குறிப்பிடப்பட்ட படிமுறைக்கமைய விண்ணப்பத்தைப் பூரணப்படுத்துங்கள். அதன் பின்னர் கிடைக்கப்பெறும் தகவல்கள் சரியானவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தைப் பதிவிறக்கம் (download) செய்து அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்திய பின்னர் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் தேசிய கல்வி நிறுவகத்தின் வைப்புச்சீட்டுப் பத்திரத்தைப் பயன்படுத்தி மற்றும் உங்கள் விபரங்களை குறித்து ரூபா 2000.00 வைப்புச் செய்த பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து உங்களது முகவரியுடன் ரூபா. 50/= முத்திரை ஒட்டப்பட்ட 9"x4" அளவுள்ள கடித உறையில் **பிரிவுத் தலைவர், சுகாதாரமும் உடற்கல்விக்குமான பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம** எனும் முகவரிக்கு 2024 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் **உடற்கல்வியும் விளையாட்டும் உயர் டிப்ளோமாக் கற்கைநெறி - 2024/2025** எனக் குறிப்பிடவேண்டும்.
- தொடர்புகளுக்கு 0117601777 (திரு. மாதவ) அல்லது 0117601714 (திரு. அரவிந்த) வார நாட்களில் தினமும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.
- உங்களது விண்ணப்பப்படிவம் ஏதேனுமொரு காரணத்தினால் நிராகரிக்கப்படின் விண்ணப்பப்படிவக் கட்டணம் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது.

**கவனிக்க வேண்டியவை -** நீங்கள் விண்ணப்பிக்கும் மத்திய நிலையத்தில் போதுமான விண்ணப்பம் கிடைக்கப் பெறவில்லை எனின் அந்த மத்திய நிலையத்திற்கு அருகில் உள்ள மத்திய நிலையத்துடன் இணைக்கப்படுவீர்கள்.

**கற்கைநெறி நடைபெறும் நிலையங்கள்**

1. தேசிய கல்வி நிறுவகம் (சிங்கள மொழி மூலம்)
2. ஊவா தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
3. நில்வலா தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
4. ருகுண தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்களமொழி மூலம்)
5. வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
6. ருவன்புர தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
7. புலதிசிபுர தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
8. மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி (சிங்கள மொழி மூலம்)
9. மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி (தமிழ் மொழி மூலம்)
10. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி (தமிழ் மொழி மூலம்)

**கலாநிதி. திரு பிரசாத் சேயதுங்க**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**